5. அறிவிப்புகள்—*தொடர்ச்சி*

(ஊ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2017 (ஆ.இ.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வு செய்யவும் மாண்புமிகு ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.*

6. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—*தொடர்ச்சி*

(ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு, 2017

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவு. மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

"2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (முன்னளி மானிய வாக்களிப்பு) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.*

ஏற்போர் 'ஆம்' என்க (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.
(மேசையைத் தட்டும் ஒலி)

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது. (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.*

11. வரவு–செலவுத் திட்டம், 2017–2018, பொது விவாதம்–*தொடர்ச்சி*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *2017–2018 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம் அவர்கள். (குறுக்கீடு) சற்று பொறுங்கள். மாண்புமிகு மீன் வளம், நிதி மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் மீதான விவாதத்திற்குள் செல்வதற்கு முன்பாக, நேற்றையதினம் 'இலவச மின்சாரம் உங்கள் ஆட்சியில் கொண்டு வந்தீர்களா? எங்கள் ஆட்சியில் கொண்டு வந்தோமா?' என்றெல்லாம் விவாதம் நடைபெற்றது. அது பொன்மனச் செம்மல், புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். ஆட்சிக் காலத்திலேதான் கொண்டுவரப்பட்டது என்று நான் உறுதியாகத் தெரிவித்தேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதற்கான பொறுப்பை நான் ஏற்றுக்கொள்கின்றேன். அதற்கான ஆதாரத்தைத் தருகிறேன் என்று சொன்னேன். அதனடிப்படையில், இன்று காலையில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுடைய அலுவலகத்திற்குச் சென்று அந்த ஆதாரத்தைக் காட்டியுள்ளேன். இதோ அந்த ஆதாரம்.*

பிற்பகல் 1–25

Commissioner & Secretary to Government–*ஆக திரு. மாதவ சர்மா அவர்கள் அப்போது இருந்திருக்கின்றார்கள்.* G.O. Ms. No.1181, dated *21–6–1984. அதுவும் இந்த உத்தரவை எந்த நாளிலே புரட்சித் தலைவர் டாக்டர் எம்.ஜி.ஆர். அவர்கள் அறிவித்தார்கள் என்று சொன்னால், பேரறிஞர் அண்ணா அவர்களுடைய பிறந்த தின விழாவிலே அறிவித்தார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதனுடைய* order–*ஐ படிக்கின்றேன் நன்றாகக் கேட்டுக்கொள்ளுங்கள்.*